கடந்த காலங்களில் அதற்கான தேவைகள் எதுவும் பூர்த்தி அடையாததால், இப்போது அது சுற்றுலாத் தலமாக இருந்தாலும், அங்கே சுற்றுலாப் பயணிகளே வராத நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பட்ட கவனத்திற்கு எடுத்துச் சென்று, சிறப்பு அடிப்படையில் சாத்தனூர் அணை கடந்த காலங்களில் எப்படி இருந்ததோ, அப்படி சிறந்த சுற்றுலாத் தலமாக அமைத்துத் தருவதோடு, செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, ஜவ்வாது மலையிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் படகு சவாரி வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருந்தன. அவற்றையும் புதுப்பித்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜவ்வாது மலைக்கு சுற்றுலாத் தலம் சார்ந்த வசதிகளை மேம்படுத்துவதற்கு ஏற்கெனவே அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிற சாத்தனூர் அணையை* adventure and eco-camping sites category-*ல் நாங்கள் ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, வரும் ஆண்டுகளில் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குறுகிய கால வினா எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

கலைக் கல்லூரி

55734—திரு. பால் மனோஜ் பாண்டியன்:

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 ஏப்ரல் 26]

(அ) *ஆலங்குளம் தொகுதி, கடையம் பகுதியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை சார்பில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

முற்பகல் 11–20

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16–வது சட்டப் பேரவைக் கூட்டத்தில் 100–வது கேள்வியும் இந்து சமய அறநிலையத் துறை தொடர்பானது. குறுகிய கால வினாவில் முதல் கேள்வியும் இந்து சமய அறநிலையத் துறை தொடர்பானது. இறைவன் அருள் முழுமையாக இந்த ஆட்சிக்கும், இந்தப் பேரவைக்கும் இருக்கிறது என்பதை இது உணர்த்துகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் கேட்டிருக்கிற கேள்விக்கு பதிலாக நான் தெரிவிக்க விரும்புவது, கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் அறிவிப்பு எண் 5–ல் 10 கல்லூரிகள் அறிவிக்கப்பட்டன. அதில் உறுப்பினர் கேட்ட கடையம் தொகுதியில் ஒரு கலைக் கல்லூரி அமைப்பதற்குண்டான ஆணையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவோடு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார். அந்தக் கல்லூரி குற்றாலநாதசுவாமி திருக்கோயில் சார்பாக நடத்தப்பட வேண்டி, அதற்காக பத்ரகாளியம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான 7.60 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. நல்லெண்ணம் கொண்டோர் நீதிமன்றத்திற்குச் சென்றதால் இதில் தடை ஏற்பட்டிருக்கிறது. கூடியவிரைவில் நீதிமன்றத்தில் அதற்குண்டான தெளிவான தீர்ப்பைப் பெற்று, நீதிமன்றத்தின் வழிகாட்டுதலோடு விரைவாக அந்தக் கல்லூரியை அமைப்பதற்குண்டான நடவடிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்பேரில் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை ஏற்று, கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு அனுமதி கொடுத்திருக்கின்ற இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தக் கல்லூரிக்கான இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கோயிலுக்கான அறங்காவலர்களை நியமித்து நீதிமன்றத்திற்குத் தெரிவித்தால் அந்தக் கல்லூரியை இந்த ஆண்டே துவங்குவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதை அறிவேன். ஆகையால் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்பதெல்லாம், அறங்காவலர்களை உடனடியாக நியமித்து, நீதிமன்ற அனுமதியைப் பெற்று இந்த ஆண்டே மாணவர் சேர்க்கையைத் துவங்க வேண்டும். அதேபோன்று இதற்கான நிதியை ஒதுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால், 10 கல்லூரிகள் துவங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியளித்திருக்கிறார்கள். அதன் பிறகு கொளத்தூர், தூத்துக்குடி, திருச்செங்கோட்டில் அமைந்திருக்கின்ற நாமக்கல், திண்டுக்கல் மாவட்டத்தில் அமைந்திருக்கின்ற ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் கல்லூரிகள் முறையாக துவங்கப்பட்டு, தற்போது இந்த நான்கு கல்லூரிகளில் 900 பேர்கள் முழுமையாக உயர் கல்வி படித்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்தத் திருக்கோயிலுக்கு இரண்டு வகையான அறங்காவலர்களை நியமிக்க வேண்டியதிருக்கின்றது. பத்ரகாளியம்மன் திருக்கோயிலைப் பொறுத்தவரையில் சட்டப் பிரிவு 46(ii)-ன்கீழ் அறங்காவலர்களை நியமிக்க வேண்டும். குற்றாலநாதசுவாமி திருக்கோயில் அந்தக் கல்லூரியை நடத்த வேண்டுமென்றால் சட்டப் பிரிவு 46(iii)-ன்கீழ் அறங்காவலர்களை நியமிக்க வேண்டும். இதை நான் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. கடந்த காலங்களில் இருந்த தொய்வை இப்பொழுதுதான் படிப்படியாகச் சரிசெய்து கொண்டுவருகின்றோம். 46(ii),*

2022 ஏப்ரல் 26]

46(iii) *மற்றும் 49*(i) *ஆகிய சட்டப் பிரிவுகளின்கீழ் மாவட்ட அறங்காவலர்களை நியமித்த பின்னர்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றாலநாதசுவாமி கோயிலைப் பொறுத்தவரையில் பத்திரிகைகளில் விளம்பரம் செய்து அரசினுடைய ஆணை வெளியிடப்படவேண்டும். ஆகவே, இந்த இரண்டு பணிகளுக்கும், கடந்த மாதம்கூட இரண்டு, மூன்று முறை இது சம்பந்தமான கூட்டத்தை இந்து சமய அறநிலையத் துறையிலே கூட்டினோம். எந்தெந்த இடங்களில் கல்லூரிகள் அமைய இருக்கின்றனவோ, அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்திருந்தோம். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் அதில் கலந்துகொள்ள முடியாத சூழ்நிலை இருந்ததை எங்கள் கவனத்திற்குக் கொண்டுவந்தார். கடந்த வாரத்தில்கூட இதுகுறித்த கூட்டத்தை நடத்தி, இந்த 10 கல்லூரிகளில் முதற்கட்டமாக அறங்காவலர்களைத் தேர்வு செய்து நியமிக்கின்ற பணியை விரைவுபடுத்தியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி நிச்சயமாக நினைத்ததை நடத்திக் காட்டுகின்ற வல்லமை கொண்ட முதல்வர் அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அந்தக் கல்லூரிகள் அமையும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை இந்த ஆண்டு அறிவிப்பதற்கு இந்த அரசு உத்தேசித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். அவ்வாறு அறிவிப்பதாக இருந்தால் நெல்லை மாவட்டத்திலுள்ள அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள சேரன்மாதேவியை மையமாகக்கொண்டு ஒரு கல்லூரியை அமைத்தால் அருகிலிருக்கின்ற ஆலங்குளம், திருநெல்வேலி மற்றும் நாங்குநேரியில் இருக்கின்ற மக்களும் அங்கே படிப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். இந்தச் சூழ்நிலையில் சேரன்மாதேவியை மையமாகக் கொண்டு அந்த கலைக் கல்லூரியை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பார்களா, அதனை இந்த மானியக் கோரிக்கையில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–25

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறையைப் பொறுத்தளவில் சட்டம் உருவாக்கப்பட்ட 1959 ஆம் ஆண்டே சட்டப் பிரிவு 60–ன்படி இதுபோன்ற அறம் சார்ந்த பணிகளைச் செய்யலாம் என்று சட்டத்தில் இருக்கின்றது. அதோடுமட்டுமல்லாமல், சட்டப் பிரிவு 66(f)–ன்படி இந்து சமய அறநிலையத் துறை மூலமாகக் கல்லூரிகள் துவக்கப்படலாம். சாஸ்திரங்கள், வேதங்கள், திருக்கோயில்களின் கட்டட நுட்பத்திற்கான வகுப்புகள் ஆகியவற்றைத் தொடங்கி, கல்லூரிகளைத் தொடங்கலாம் என்றிருக்கின்றது. அள்ளி, அள்ளிக் கொடுக்கின்ற வள்ளலாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே வீற்றிருக்கின்றார்கள். இந்த 10 கல்லூரிகள் அமைந்த பிறகு, அங்கு மாணவர்கள் சேர்க்கை குறித்து ஆய்வு செய்து, தேவை ஏற்படின், இந்த 10 கல்லூரிகளுக்குப் பிறகு, அறிவிக்கப்படுகின்ற கல்லூரியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் கல்லூரியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று ஆரம்பிப்பதற்கான முயற்சியை இந்து சமய மற்றும் அறநிலையத் துறை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினாவிற்கு துணைக் கேள்வி கிடையாது என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடு) உட்காருங்கள். விதி 110–ன்கீழ் அறிக்கை உள்ளது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]